அரசாங்கம் நிரந்தரமாக இருக்கும். இந்த அரசு 10 ஆண்டு காலம் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கருதுகிறது. இது அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சனை, அவர்களுடைய வயிற்றுப் பிரச்சனை என்பதைத் தெரிந்துதான் அரசு இந்த முடிவை எடுக்க விரும்புகிறது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் அடிப்படைச் சம்பளம் 18 ரூபாய் இருப்பது அரசுக்குத் தெரியுமா? உதாரணமாக மன்னார்குடி, கும்பகோணம் நகராட்சிகளில் 18 ரூபாய் அடிப் படைச் சம்பளம் இருப்பதை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மன்னார்குடி நகராட்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். விவரம் அறிந்து, பதில் சொல் கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிரந்தரமில்லாத இந்தத் தொழிலாளர்களுக்குப் பண்டிகைக் காலங்களில் அட்வான்ஸ் தொகை ஏதேனும் கொடுக்கப்படுமா? மற்ற அரசு அலுவலர்கள் போன்றோருக்கு பண்டிகைக் காலங் களில் அட்வான்ஸ் தொகை வழங்கப்படுவதுபோல் இவர் களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிரந்தரமாக்கப்பட்டவர்களுக்குத்தான் அதற் குரிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. நிரந்தரமாக்கப் படாதவர்களுக்கு அவர்களுக்குரிய சலுகைகள் மட்டும்தான் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேவங்குடி பஞ்சாயத்து.

* 677 **வினா—திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டத்தில் உள்ள தேவங்குடி பஞ்சாயத்தில் நடைபெற்ற ஊழல் குறித்து அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

1978 மார்ச்சு 27]

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இதைப்பற்றி தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் புகார்கள் வந்திருக்கின்றன.

(ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர் இவற்றை விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டு நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவம் குறித்து, இந்தப் புகார். பஞ்சாயத்துத் தலைவர் ரோடு போடுவது என்று சொல்லியும் பைப் போடுவது என்று சொல்லியும் பணத்தை சாங்ஷன் செய்து பிறகு ரோடும் போடவில்லை பைப்பும் அமைக்கவில்லை. இது சம்பந்தமாக புகார் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை விசாரிக்கப் படாததற்குக் காரணம் யாது? ஆண்டு ஒன்றாகியும் இதுவரை விசாரிக்காததற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் புகார்கள் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 24-10-77 அன்றும் 7-11-77 அன்றும் ஏறத்தாழ 11 குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புகார்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆட்சித் தலைவர் வட்டார வளர்ச்சி அதிகாரியைப் பணித்துள்ளார்.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய பெருவாரியான உறுப்பினர்கள் கையெழுத்துப்போட்டு அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டும் அங்குள்ள தாசில்தாரோ அல்லது ஆர். டி. ஓ.வோ கவனம் செலுத்தவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

[1978 மார்ச் 27

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் புகார்கள் குறித்து விசாரிக்குமாறு வட்டார வளர்ச்சி அதிகாரி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். ஆகவே, புகார்கள்தான் வந்திருக்கின்றன. அப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்குமேயானால் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, புகார் என்னவென்று தெரியவில்லை. அதைக் கொஞ்சம் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே 11 புகார்கள் வந்திருக்கின்றன. அது ஒரு பெரிய புராணம்! (சிரிப்பு)

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பதினொரு புகார்கள் அத்தனையும் பற்றிய விவரங்களைச் சொல்ல வேண்டியதில்லை. அட்லீஸ்ட் நேச்சர் ஆஃப் தி சார்ஜஸ் என்ன என்பதையாவது சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் புகார்கள் பணம் கையாடல், பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியது சம்பந்தப்பட்டது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துக்கள் என்பது தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் ஆகின்றன. பொதுவாக பொதுமக்களுக்கு பஞ்சாயத்துத் தலைவரிடம் நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது. அவர்கள் பொதுமக்களுடைய பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள் என்ற உணர்வு அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஆகவே கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு என்று தனி ஆடிட் டிப்பார்ட்மென்ட் ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே எல்லா இடங்களிலும் அப்படிப்பட்ட நம்பிக்கையின்மை ஏற்பட்டுவிடவில்லை. சில கிராமப்

1978 மார்ச் 27]

பஞ்சாயத்துக்களில் அப்படி ஏற்பட்டிருக்குமானல் அதில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவறுகளை எடுத்துக்காட்டி கண்டனம் தெரிவிக்கின்ற உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. ஆனல் தவறுகளை விசாரித்து வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் குறிச்சி பஞ்சாயத்துத் தலைவர் மீது பல்வேறு புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர் பல தவறுகளைச் செய்திருக்கிருர். அவர்மீது அப்படி ஏதாவது மனு வந்திருக்கிறதா? அது குறித்து நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி தென்ருற்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே, இதுபற்றியே கேள்விகளைக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மனுக்கள் அங்கே வந்திருக்கின்றனவா என்பது தெரியவில்லை. அப்படி வந்திருந்தால் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் செலவு

* 678 வின—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாக அதிகாரிகளின் எண்ணிக்கையும், அவர்களுக்கு வசதிகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றதை அரசு அறியுமா?